**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 166 of 2023

Deposition of P.W. 1

Name of the Witness: திருமதி.சாலம்மாள்

Date : 27.01.2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

4) 1.3.2023ல் வா.சா.ஆ.4 சட்ட அறிவிப்பை நான் பிரதிவாதிகளுக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் முத்தாம்மாளுக்கு சொத்துக்கள் சொந்தமானது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். முத்தம்மாளின் மகன் 1ம் பிரதிவாதி உயிருடன் இருப்பதால் தாவா சொத்தில் உரிமை கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. எனக்கு 37 வயதாகிறது. 2003ல் எனது அப்பா, என் பாட்டி முத்தம்மாள், என் அப்பாவுடன் உடன் பிறந்த வெங்கட்ராமன் ஆகியோர் சேர்ந்து 3ம் பிரதிவாதிக்கும், கோவிந்தசாமிக்கும் வா.சா.ஆ.1 எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தற்போது வரை அந்த ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை ரத்து செய்ய வேண்டும் என்று நான் பரிகாரம் கேட்டுள்ளேன். அந்த ஆவணத்தை பற்றி எனக்கு 2023ல் தான் தெரிய வந்தது. நான் 2023 வரை வழக்கு சொத்தில் இல்லை. வெளியூரில் காரை வேலை செய்து வந்தேன்.

5) 2022ல் 1, 2பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதி பேரில் எழுதி வைத்த கிரைய ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட ஆவணம் பற்றி தான் எனக்கு தெரியும். எனக்கு படிக்க தெரியாது. அந்த ஆவணத்தை படிக்க சொல்லி கேட்டு தெரிந்து கொண்டேன். 2 ஏக்கர் 10

சென்ட்டுக்கு அந்த ஆவணம் ஏற்பட்டுள்ளது. 2023ல் என் அப்பா, அம்மாவிடம் சென்று 4ம் பிரதிவாதி பேரில் உள்ள கிரைய ஆவணத்தை மாற்றி கொடுக்கும்படி கேட்டேன். இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. அது போல் எதுவும் எனது அம்மா, அப்பாவிடம் கேட்கவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு அம்மா, அப்பா திருமணம் செய்து வைக்கவில்லை. நானாகவே எனது விருப்பத்திற்கு திருமணம் செய்து கொண்டேன். என் அம்மா, அப்பா எனது பெயரில் 6 சென்ட் நிலம் கிரையம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல. என் அப்பா, அம்மா எனக்கு நிலம் கொடுத்தார்கள் என்றாலும் அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) வழக்கு சொத்து முத்தம்மாளுக்கு சொந்தம் என்றாலும் அதனால் தான் அவர் அவரது மகனுடன் பேரனுக்கு எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. முத்தம்மாளுக்கு தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. இருந்தால் தான் தாக்கல் செய்யமுடியும். ஆவணம் அவர்களிடம் உள்ளது. நான் எனது அப்பாவுடன் வாதிகள் எல்லோரும் காரை வேலைக்கு போவோம். பாட்டி முத்தம்மாள் இறந்து 10 வருடங்கள் இருக்கும். முத்தம்மாளுக்கு 1ம் பிரதிவாதி, வெங்கட்ராமன் மட்டும் தான் வாரிசுகள். அத்தை இருந்தார். அவர் இறந்து விட்டார். என் அத்தையின் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது அத்தையின் வாரிசுகளுக்குஇந்த வழக்கில் உரிமையுள்ளதால் அவர்களை

இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

7) என் பாட்டி முத்தம்மாள இறந்த பிறகு எனது அப்பாவிற்கு சொத்து பாத்தியப்பட்டது என்றும் 2014ல் என் அப்பாவிற்கும் அவரது சகோதரர் வெங்கட்ராமனுக்கும் வாய்மொழி பாகம் ஏற்பட்டு அதில் தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதி என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளதால் நான் இந்த வழக்கை தாக்கல செய்துள்ளேன். வெங்கட்ராமன 2015ல இறந்து விட்டார். என்னுடைய சகோதரர் கோவிந்தசாமி 2010ல் இறந்து விட்டார். எனக்கு திருமணமானதிலிருந்து நான் என் கணவர் வீட்டில் தான் வசித்து வருகிறேன். எனது சகோதரிகளும் அவர் அவர்கள் கணவர் வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

8) வாதிகள நாங்கள திருமணமாகி அவா அவர்கள கணவர் வீட்டில இருந்தோம என்றாலும், நாங்கள தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் சுவாதீனத்தில் இருந்தோம் கூட்டு சுவாதீனத்தில் இருந்ததற்கு நாங்கள் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால சரிதான். தாவா சொத்தில சுவாதீனத்தில இல்லாமல் சுவாதீனத்தில இருப்பதாக சொல்லி தவறான நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு கடனுக்காக ஆவணம் எழுதி கொடுத்து அந்த ஆவணம் ரத்து செய்து பின்னர் 3ம் பிரதிவாதி பெயரிலே ஆவணம் ஏற்பட்டது என்றாலும், 4ம் பிரதிவாதி இந்த வழக்கில் தேவையற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிதுராஜத்தி

சொத்து இல்லை என்றாலும் 1ம் பிரதிவாதிக்கு அவருடைய அம்மா முத்தம்மாள் மூலமாக தனி பட்ட சொத்து என்றால் சரியல்ல. நான் எப்போதும் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் பொய்யான விவரங்கள் அடிப்படையில் எந்த ஒரு முகாந்திரமும் இல்லாமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

9) நான் முதலில் 1.3.2023ல் தவறான தகவல்களுடன் சட்ட அறிவிப்பு அனுப்பி விட்டு அதை சரி செய்வதற்காக வேறு ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். நான் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்பதால் தான் எனக்கு சரி வர விவரங்கள் தெரியாததால் மாற்றி மாற்றி சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் வேறு நபருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.